செய்தி வெளியீடு நாள்: 02.02.2026

**மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க. ஸ்டாலின் அவர்களால் நாளை (03.02.2026) திறக்கப்படவுள்ள கொளத்தூர் இரத்த சுத்திகரிப்பு நிலையம் மற்றும் கொளத்தூர் ஏரிக்கரை பூங்கா திறப்பு விழா முன்னேற்பாடு பணிகள் குறித்து மாண்புமிகு அமைச்சர் திரு.பி.கே.சேகர்பாபு அவர்கள் ஆய்வு செய்து, ஒப்பந்ததாரர்கள் மற்றும் அலுவலர்களுக்கு அறிவுரைகள் மற்றும் ஆலோசனைகள் வழங்கினார்**

*****

**மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் நல்வழிகாட்டுதலின்படி** இன்று (02.02.2026) துறைமுகம் சட்டமன்றத் தொகுதி, வால்டாக்ஸ் சாலை, தண்ணீர் தொட்டி தெரு மற்றும் அண்ணா பிள்ளை தெருவில் வடசென்னை வளர்ச்சித் திட்டத்தின்கீழ் சிஎம்டிஏ சார்பில் கட்டப்பட்டு வரும் இரத்த சுத்திகரிப்பு மையம், 700 புதிய அடுக்குமாடி குடியிருப்புகள், சமுதாய நலக்கூடம், மாநகராட்சி அச்சகம் மற்றும் விளையாட்டுத் திடல் என "**ஒருங்கிணைந்த வளாகம்**" கட்டுமானப் பணிகளை துரிதபடுத்தும் வகையில் மாண்புமிகு இந்து சமயம் மற்றும் அறநிலையத்துறை அமைச்சரும் சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமத் தலைவருமான திரு.பி.கே.சேகர்பாபு அவர்கள் நேரில் சென்று பார்வையிட்டு ஆய்வு செய்து, பணிகளை விரைந்து முடித்து, மக்கள் பயன்பாட்டிற்கு கொண்டு வர ஒப்பந்ததாரர்கள் மற்றும் பொறியாளர்களை அறிவுறுத்தினார்.

அதனைத் தொடர்ந்து **மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் அவர்களால்** நாளை (03.02.2026) திறக்கப்படவுள்ள கொளத்தூர் சட்டமன்ற தொகுதியில், அகரம், ஜெகநாதன் தெருவில் வடசென்னை வளர்ச்சித் திட்டத்தின்கீழ் சிஎம்டிஏ சார்பில் கட்டப்பட்டு வரும் "**இரத்த சுத்திகரிப்பு நிலையம் மற்றும் மறுவாழ்வு மையம்**" முன்னேற்பாடு பணிகள் குறித்து மாண்புமிகு இந்து சமயம் மற்றும் அறநிலையத்துறை அமைச்சரும் சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமத் தலைவருமான திரு.பி.கே.சேகர்பாபு அவர்கள் நேரில் சென்று பார்வையிட்டு ஆய்வு செய்து, ஒப்பந்ததாரர் மற்றும் அலுவலர்களுக்கு அறிவுரைகள் மற்றும் ஆலோசனைகள் வழங்கினார்.

**மாண்புமிகு இந்து சமய அறநிலையத்துறை அமைச்சரும் சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமத் தலைவருமான திரு.பி.கே.சேகர்பாபு அவர்கள் செய்தியாளர்களிடம் பேசும்போது தெரிவித்ததாவது :**

கொளத்தூர் சட்டமன்றத் தொகுதியில் பொருளாதாரத்தில் பின்தங்கிய மக்களுக்குபாதுகாக்கப்பட்ட குடிநீர், சீரான கழிவுநீர் வசதி, தடையில்லா மின்சாரம், ஆன்மீகப் பெருமக்கள் வழிபடும் திருத்தலங்கள், கிறிஸ்தவ, இஸ்லாமிய சிறுபான்மையினர் வழிபடும் தளங்கள், பொதுச் சாலைகள், தெருவிளக்குகள், அங்கன்வாடி மையங்கள், பள்ளிக்கூடக் கட்டிடங்கள், மருத்துவ சேவைகளுக்கான கட்டமைப்புகள் என— அனைத்து அடிப்படை வசதிகளையும் முழுமையாக நிறைவேற்றும் வகையில், **மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள்** கொளத்தூர் சட்டமன்றத் தொகுதியை தன்னிறைவடைந்த, தமிழகத்திற்கு முன்மாதிரியான தொகுதியாக மாற்றுவதற்கான பல திட்டங்களை தீட்டிக் கொண்டு செயல்படுத்தி வருகின்றார்.

வியாபாரிகள் மற்றும் தொழில் செய்பவர்களின் நலனை கருத்தில் கொண்டு பாலங்கள், வண்ண மீன் வர்த்தக மையங்கள் அமைக்கப்பட்டு வருகின்றன. 40–50 ஆண்டுகளுக்கு முன்பு கட்டப்பட்ட கழிவுநீர் அகற்று நிலையங்கள், 50–60 ஆண்டுகளுக்கு முன்பு பதிக்கப்பட்ட குடிநீர் குழாய்கள் இன்றைய தேவைக்கேற்ற வகையில் பெரிதுபடுத்தப்பட்டு புதுப்பிக்கப்படுகின்றன.

அங்கன்வாடி கட்டிடங்கள், பொது விநியோகத் திட்டத்தின் கீழ் செயல்படும் ரேஷன் கடைகள் ஆகியவை புதிய கட்டுமானங்களாகவும், பழைய கட்டிடங்கள் புனரமைக்கப்பட்டும் அனைத்து அடிப்படை

Verified @ RealEstate ™

வசதிகளுடன் உருவாக்கப்பட்டு வருகின்றன. **மாண்புமிகு தமிழ்நாடு முதல்வர் அவர்களின்** உத்தரவின் பேரில் கொளத்தூர் சட்டமன்றத் தொகுதியில் பல்வேறு பாலப்பணிகள் நடைபெற்று வருகின்றன. அதன் ஒரு பகுதியாக, இன்று டயாலிசிஸ் (இரத்த சுத்திகரிப்பு) மையம், செயற்கை கால் பொருத்தும் நிலையம், மற்றும் இன்றைய காலகட்டத்தின் முக்கிய மருத்துவ தேவையாக மாறியுள்ள பிசியோதெரபி மையம் அமைக்கப்பட்டுள்ளது. இந்த டயாலிசிஸ் மையத்திற்கு வருபவர்களுக்கு முழுமையாக இலவச சிகிச்சையும், இலவச உணவும் வழங்க வேண்டும் என்று **மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள்** உத்தரவிட்டிருக்கிறார். நாளைய தினம் இந்த மையம் மக்கள் பயன்பாட்டிற்கு திறந்து வைக்கப்படுகிறது.

ஏற்கனவே, வானுயர்ந்த பெரியார் நகரில் **மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள்** சட்டமன்ற உறுப்பினராக இருந்த காலத்தில் பெரியார் பெயரில் புறநகர் மருத்துவமனை ஒன்றை உருவாக்கி தன் அடையாளமாக நிலைநிறுத்தியுள்ளார். அந்த பெரியார் நகர் மருத்துவமனைக்கு துணைபுரியும் வகையில் இந்த இரத்த சுத்திகரிப்பு மையம் செயல்படும். மேலும், இந்த மையத்தோடு இணைந்து செயற்கை கால் பொருத்தும் பிரிவு, பிசியோதெரபி மையம், இதே வளாகத்தில் அமைந்துள்ள ஆறு புதிய ரேஷன் கடைகள், ரெட் ஹில்ஸ் பகுதியை ஒட்டி அமைந்துள்ள 450 மீட்டர் நீளமுள்ள புனரமைக்கப்பட்ட பூங்கா ஆகிய அனைத்தையும் **மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள்** நாளை மக்கள் பயன்பாட்டிற்கு ஒப்படைக்கின்றார். இந்த பணிகளை நிறைவேற்றுவதில் சென்னைப் பெருநகர வளர்ச்சிக் குழுமத்தின் செயலாளர் அன்பிற்கினிய திருமதி.காகர்லா உஷா, இ.ஆ.ப., அவர்களும், உறுப்பினர் செயலாளர் அன்பிற்கினிய திரு.கோ.பிரகாஷ், இ.ஆ.ப., அவர்களும், துறையின் CEO திரு.அ.சிவஞானம், இ.ஆ.ப., அவர்களும், சென்னை மாநகர ஆணையாளர் திரு.ஜெ.குமரகுருபரன், இ.ஆ.ப., அவர்களும், மாநகராட்சி மத்திய வட்டார துணை ஆணையாளர் திரு.எச்.ஆர்.கௌஷிக், இ.ஆ.ப., அவர்களும், எங்கள் இயக்கத்தைச் சேர்ந்த மண்டலக் குழுத் தலைவர் திருமதி.சரிதா மகேஷ்குமார் அவர்களும், மாநகராட்சி மாமன்ற உறுப்பினர் அன்பிற்கினிய அண்ணன் திரு.நாகராஜன் அவர்களும், கழக முன்னோடிகள் திரு.சந்துரு, திரு.மகேஷ் உள்ளிட்ட அனைவரும் ஒருங்கிணைந்து செயல்பட்டு வருகின்றனர். இந்த டயாலிசிஸ் மையம் ஏழை, எளிய மக்களுக்கு ஒரு வரப்பிரசாதமாக அமையும் என்பதை இந்த நேரத்தில் பெருமையுடன் தெரிவித்துக் கொள்கிறோம்.

இந்த ஆய்வுகளின்போது சிஎம்டிஏ உறுப்பினர் செயலர்/முதன்மைச் செயலாளர் திரு.கோ.பிரகாஷ், இ.ஆ.ப., முதன்மை செயல் அலுவலர் திரு.அ.சிவஞானம், இ.ஆ.ப., மாநகராட்சி வடக்கு வட்டார துணை ஆணையாளர் திரு.கட்டா ரவி தேஜா, இ.ஆ.ப., மாநகராட்சி மத்திய வட்டார துணை ஆணையாளர் திரு.எச்.ஆர்.கௌஷிக், இ.ஆ.ப., சிஎம்டிஏ தலைமைப் பொறியாளர் திரு.வெங்கடேசன், மண்டலக் குழுத்தலைவர் திருமதி.சரிதா மகேஷ்குமார், மாநகராட்சி நகர் நல அலுவலர் டாக்டர் ஜெகதீசன், கண்காணிப்புப் பொறியாளர்கள் திரு.பாலமுருகன், திரு.ராஜன்பாபு, மண்டல அலுவலர் திரு.விஜய்பாபு மற்றும் துறைச் சார்ந்த அலுவலர்கள் உடனிருந்தனர்.

Verified RealEstate™